11th February 1959]

தாலும், ரயில் நிலையங்களில் தாங்க முடியாத கூட்டம் இருக்கின்றன. அதனால் இங்கிருந்து நேர் முகமாக தனுஷ்கோடிக்கு போக இந்த மார்க்கம் ரொம்பவும் சமீபமாய் குறுக்கே இருக்கிறது. அதனால் ரொம்ப மைல்களும் குறைவாக ஆகிறது. அதனால் இந்த லைனில் காரைக்குடி வரையில் பல நேர் வண்டிகளை விடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் கேள்வி நேரத்தில் கேள்வி கேட்க வேண்டுமேயொழிய அபிப்பிராயத்தை தெரிவிக்கக்கூடாது. இருந்தாலும் கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்வதாக இருந்தால் பதில் சொல்லலாம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் குறிப்பிட்டபடியே மெயில் லைனில் திருச்சி வரையில் நேர் மார்க்கம் இருக்கிறது. அது வரையில் போட் மெயில் போகிறது. அதை அரந்தாங்கி வரையில் நீடிக்கவேண்டுமென்றால் நடுவில் இருக்கக்கூடியவர்களாகிய திருச்சியிலுள்ளவர்கள், மாயவரம் பகுதிகளில் உள்ளவர்கள் பாதிக்கப்படுவார்கள். இந்த மார்க்கத்தில் இரண்டு வேகமாகப் போகும் ரயில்கள் இருக்கின்றன. அதனால் அதிகப்படியாக விடுவதற்கு முடியாமல் இருக்கிறது. இது தான் நிலைமை.

Use of fire-arms by the Police

* 205 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government intend to revise the Police Code with regard to the use of fire-arms by the Police?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI A. A. RASHEED : May I know whether the Police Code allows shooting to kill or to disperse unruly crowds?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am unable to answer the question.

SRI K. SATTANATHA KARAYALAR : போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதைப்பற்றி மத்திய சர்க்கார் சமீபத்தில் எல்லா சமஸ்தானங்களும் ஒன்றுபட்டு ஒரு சட்டம் நிறைவேற்ற வேண்டுமென்று ஏதாவது எழுதி உள்ளார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி எந்த விதமான தகவலும் கொடுப்பதற்கு இல்லை.

Religious education

* 206 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is a proposal to have religious education as an integral part of the educational system?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI S. LAZAR : இதனுடைய தேவையைப் பற்றி நாட்டிலுள்ள பெரும் தலைவர்கள் ஸர். ராதாகிருஷ்ணன், மகாத்மாகாந்தி போன்றவர்கள் வற்புறுத்தியதன் காரணத்தால் இதைப்பற்றி பரிசீலனை செய்வதற்கு ஒரு தனி குழுவை நியமிக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் மத போதனை என்று சொல்லலாம். இதைப் பற்றி பேசும் போது பல பிரச்னைகள் வருகிறது. அதை விட்டு விட்டு எல்லோருக்கும்